

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றிய பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், பொன்.செல்வம், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் அறிக்கை!



*கிருஷ்ணகிரி, ஜூன் 3-*

*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் அறிக்கை வருமாறு:-*

*தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,*

*“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,*

*பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பலலட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே,*

*சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பலதீட்டி தமிழ் நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,*

*அய்யன் திருவள்ளுவருக்கு தேர்வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,*

*உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.*

*இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக பணியாற்றிய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் ஆகியோரின் வழியில் (ஜூன் 3 ம் நாள்) கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், கிளை கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர்கள் சார்ந்த பகுதிகளில் கழகக் கொடி ஏற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் எனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொ.மு.ச. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா - நல உதவிகள்!

## மின் கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!



சென்னை, ஜூன் 3–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக நலஉதவிகள் வழங்கப்படும் என மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஓய்வறியாச் சூரியன், தமிழ்நாட்டின் நவீனசிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும், தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர்.

தமிழ்நாட்டின் பல அனல் மின் நிலை யங்கள், நீர்மின் நிலையங்கள், காற்றாலை மின்நிலையங்கள், சூரிய மின் நிலையங்கள் என பல மின் நிலையங்களை துவக்கி தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கி, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக மாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

மின்வாரியத்தில் பணிபுரிந்து 74000 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து அவர்களின் குடும்பத்தில் ஒளிவிளக்கை ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளில் 03.06.2026ல் தமிழ்நாடு முழுவதும் உள்ள மின்கழகத் தொமுச நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் திட்டத்தில் / கோட்டத்தில் பேரவைக் கொடி ஏற்றி, கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, இனிப்புகள் வழங்கி, நலிந்த தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்திலுள்ள மின்கழகத் தொமுச தலைமைச் சங்க அலுவலகத்தில் 03.06.2026 அன்று காலை 10 மணியளவில் பேரவை கொடி ஏற்றி, மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இனிப்புகள் வழங்கப்படும். பின்னர் மின்வாரியத்தில் பணிபுரியும் காவல் பணியாளர்கள் / தூய்மை பணியாளர்கள் / பொதுமக்கள் என நல உதவிகள் ரூ.1500 மதிப்புள்ள தரமான அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 500 பேர்களுக்கு வழங்கப்படும்.

நம் அனைவரின் நெஞ்சங்களிலும், நீங்காமல் இடம் பெற்றிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 103வது பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# தமிழ்நாடு, கேரளாவில் தென்மேற்குப் பருவமழை!

## 2 நாளில் தொடங்கும்!

சென்னை, ஜூன் 3–

தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை 2 நாட்களில் தொடங்கக்கூடும். இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்குப் பருவமழை அடுத்த 2 நாட்களில் அரபிக் கடல், வங்கக்கடல், லட்சத்தீவுகள், கேரளா, தமிழகத்தின் சில பகுதிகளுக்கு முன்னேறும் வகையில் நிலைமை சாதகமாக உள்ளது. அதனால், தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை அடுத்த 3 நாட்களில் தொடங்க வாய்ப்பு உள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல், அதை ஒட்டிய தெற்கு கேரளப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களில் (ஜூன் 1) முதல் 6ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். குறிப்பாக, இன்று நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம், திருச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யும்.

வெப்பநிலை 86 டிகிரி முதல் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 4ம் தேதி வரை மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தஞ்சை மத்திய மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.இராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டீ.மகேஷ்கிருஷ்ணசாமி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி மாநகரச் செயலாளர் சண். இராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற இரா. ஜெயராமகிருஷ்ணன் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் மடத்துக்குளம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றிய கழக பொறுப்பாளர் எஸ்.பி.தங்கராஜ் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழின் முரசொலி கலைஞர் வாழ்க!!



**கா**லத்தை வென்று தடம் பதித்த வீரம், நமது சூரியோதயம். கண்மணி காவியம் திராவிடத் திலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன்3. திராவிடத் திருவிழா.

103வது அகவை, இருளை விரட்ட இயக்கமாக இயங்கிடும் உடன்பிறப்புகளுக்கு மேலும் உறுதியினை அளித்திடும் நாள். உலகெங்கும் உள்ள திராவிடத்தமிழர்கள் போற்றி கொண்டாடும் நாள்.

ஒவ்வொரு உணர்வுள்ள திராவிட தமிழரும், போர் வீரனாகி, அறிவாயுதம் ஏந்தி, நம் வரலாற்றுத் தலைவர் கலைஞரின் திருவுருவிற்கு மாலை அணிவித்து வணங்கி நற்பணிகள் செய்து மக்களுடன் பிறந்த நாளை வாழ்நாள் கடமையாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

உண்மையான உணர்வாளர்களும் ஆற்றல் மிகு அறிவு நெறியாளர்களும் முத்தமிழ் அறிஞரை போற்றிப் புகழ்வதை ஏற்றுக்கொள்ளாத தமிழின துரோகிகள், சனாதனிகள், பல்முனை தாக்குதல்களை நடத்தினாலும் அவைகளை தனது தியாகம், வீரம், அறிவு நிரம்பிய வாழ்வால் ஈடு இணையில்லா செயல் திறன்களால் தூள் தூளாக்கி அவர்களை ஓடவிட்டு தலை நிமிர்ந்து வரலாற்றில் நிலைத்த புகழுடன் குறளோவிய ஆசான் கலைஞர், வரலாறாக வாழ்கிறார்.

இன்று கழகமாக, கலைஞர் வடிவாக, தன் செயல்களால் உலகை வியக்கவைத்து, மாற்றாருக்கு திராவிடச்சிங்கமாக காட்சி தரும், நம் உயிரனைய உத்தமத்தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். அவருக்கே உரிய வகையில், ஒரு கட்டுரையில்,

“பாடம் படிக்க பள்ளிக்கூடம் போ.... போ....” என்று என் பெற்றோர் விரட்டிய போது, பகுத்தறிவு சுயமரியாதைப் பாடம் படிக்க பெரியாரின் பள்ளிக்கூடத்திற்கு வந்தவன் நான்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். நானும் அப்படித்தான் படி, படி, என்று சொன்ன போது கலைஞரின் பள்ளிக்கூடத்தில் படித்தவன் நான்” என்று அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைத்தார்.

சரித்திரங்களின் துவக்கம், ஒன்றாகவே இருப்பது நம்மை பெருமையுடன் நிமிர வைக்கிறது. இனப்பகைகள் அதிர்ச்சியடைந்து சாய்வது நமக்கு மகிழ்வை தருகிறது.



**கடலூர் இள. புகழேந்தி**
**தேர்தல் பணிக்குழு செயலாளர்**

கலைஞர், தளபதியின் அறிவார்ந்த தாக்குதலால் அந்தக் கூட்டம் வீழ்ந்து கிடக்கிறது. அதனால்தான் இன்றும் கலைஞர் வாழ்கிறார் என தமிழ்நாடு சொல்கிறது.

“பேனாவும், நாவும் தான் எங்கள் ஆயுதங்கள்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். ஆம்! அவரின் வாழ்வுப் பயணத்தை பார்ப்போர் அறிவர். அவரின் எழுத்துப் பேசும்! பேச்சு எழுத்தாய் காலப்பதிவாகும். ஈடு இணையற்ற பன்முக ஆற்றல் கொண்ட நற்றமிழ் நாயகர் கலைஞர் அவர்கள் என்றும் விரும்புவது கொள்கைப்பூர்வமான இளைஞர்படை. தாய்மொழித் தமிழின் பாதுகாப்பு. அனைவருக்குமான சமூகநீதி. கல்வியில் மேன்மை. கருத்தாக்கத்தில் இமய உறுதி. வருங்காலம் கழக காலமாக நிலைத்திட உலகு போற்ற தமிழர் உயர்ந்திட, கழக உடன்பிறப்புகளின் உழைப்பு ஆகியவற்றை அவர் இறுதி நிமிடம் வரை விரும்பினார்.

மேலும் திராவிட இயக்க கொள்கைகளை பாமரரும் புரிந்து கொண்டு, செயல்பட வேண்டும். கடைசி தமிழனும் தமிழச்சியும் கூட சனாதனத்தை வீழ்த்திடும் வேங்கைகளாக இருந்து, ஆரியக் கூட்டத்தை விரட்டி அடித்திட அவர்களுக்கு இயக்கம் உணர்வூட்டும் இலட்சியப் பாடங்களை கற்பிக்க வேண்டுமென்றார், வீரமிகு கலைஞர் பெருமகனார். தன் வாழ்வையே அதற்காக அர்ப்பணித்தவர் .

பிறந்தநாள் நாயகர் கலைஞரின் தமிழ்ப்பற்றும், செயலாற்றல் மிக்க அவரின் துணிவையும், அவரின் பள்ளிப் பருவத்திலேயே உலகம் அறிந்து கொள்ளும் வண்ணம் பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அதில் முதன்மையானதாகவும் நான் கூற விரும்பும் சரித்திர பதிவு

1938ல் இந்தி எதிர்ப்பு போராட்டக் கிளர்ச்சிகள். நாடு முழுவதும் இராசகோபாலாச்சாரி (ராஜாஜி) யின் செயல்களை எதிர்த்து நடைபெற்றன.

தந்தை பெரியாரின் போர்க்கள ஆணைகள் வடிவங்களாக மாறி வெற்றிகரமாக நடந்தது.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தரர் போன்ற பல தமிழறிஞர்கள் கலந்து கொண்ட முதல் இந்தி எதிர்ப்பு மாநாடு, பிப்ரவரி 27ல். காஞ்சியில் நடைபெற்றது.

அதன் விளைவுகள், தமிழ் மொழிக்காக உயிரையும் தரக் கூடிய வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை நாடு தெரிந்துக் கொண்டது. தமிழறிஞர்களும் ஒன்று திரண்டெழ தந்தை பெரியார் வேண்டுகோள் பயன ளித்தது.

இப்படிப்பட்ட போர்க்களத்தில் தமிழ் நாட்டையே ஆச்சரியப்படவைத்த தமிழ் வீரராக, ஒரு பள்ளி மாணவர் தன் நண்பர்களை திரட்டி “தமிழ் வாழ்க!” என முழக்கமிட வைத்து இந்தி எதிர்ப்பு ஊர்வலமாக சென்று போராட்டத்தை நடத்தினார். அவர் தானே எழுதி தயாரித்த துண்டறிக்கைகளை மக்களிடம், மாணவர்கள் மூலம் கொடுக்க வைத்தார். “தமிழ் காக்க வாருங்கள்” என்ற குரலெழுப்பி அழைப்பு விட்டார்.

அந்த அழைப்பாளிதான் மொழிக்காக்க பல்வேறு சிறை கொட்டடிகளில் வதைபட்டார். வீரராகவே வெளிவந்து தொடர்ந்து போர்க்களத்தில் மொழி காக்கும் வீரராக போர்க்களங்களுக்கு தலைவராக இருந்தார். அவர்தான்

எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் முதல்வரான மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அன்று போர்க்களத்தில் மாணவர் கோலத்தில் வீசிய இளம் புயல்தான் தலைவர் கலைஞர்.

அவரின் போராயுதங்களான எழுத்தும், பேச்சும் வீரமிகு தமிழ்நெறிமிகு பணிகளின் தொடர்ச்சி இன்றும் எழுச்சியுடன் விழிப்புணர்வுடன் உள்ளது என்றால், அது

திராவிடக் கொள்கை குரலாக, கலைஞரின் பேராற்றலாக இன்று நமது இளைஞரணி செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆதாரமாக திகழ்கிறார்.

**“உதயக்கதிர் ஒளி**
**வெளிச்சம் நிரந்தரம்.**

**இடி இடி இடித்தால்**
**எழும்பும் ஒலி சத்தம்**
**தற்காலிகம்.”**

என்பதை உலகமறிய செய்திட, வாழ்நாளும் முழுவதும்”

தமிழுக்காக, தமிழர்களுக்காக, திராவிட நீதிக்காக,

தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த தியாக தீபம் கலைஞர் புகழ் வாழ்க என்று வாழ்த்தொலி எழுப்பி என்றும் தலைவர் தளபதி தலைமையில் தமிழ் நாட்டின் கம்பீரமாக நிலைத்துள்ள கலைஞரின் கொள்கைகளை பாடுவோம்.

தலைவர் தளபதி ஆணையிடுவார்.

இளைஞரணி உதயா வழிகாட்டுவார்.

கழகப் போர்ப்படை வெற்றிநடைபோடும்.

முத்தமிழறிஞரின் புகழ் வாழ்க!

தமிழ்நாட்டைக் காக்க, இடைக்கால இருட்டினை விரட்டிட

கண்மணித்தலைவர் தளபதியின் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய

முத்தமிழறிஞரின் 103 வது பிறந்தநாளில் அனைவரும் உறுதியேற்போம்..